## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினிடம் அழைப்பிதழ்!

# புதுடெல்லியில் ஜூலை 13-ல் ஞானபீட விருது!

### கவிப்பேரரசு வைரமுத்து பெருமிதம்!



இந்தியாவில்
இலக்கியத்துக்கு வழங்கப்படும்
உச்சபட்ச விருதான
'ஞானபீட விருது'
25 ஆண்டுகளுக்குப் பிறகு
தமிழுக்குக் கிட்டியிருக்கிறது.

எனது பிறந்தநாளான
ஜூலை 13 ஆம் நாள்
டெல்லியில்
ஞானபீட விருது வழங்கும்
விழா
நடைபெறுகிறது.

காஷ்மீர்
மன்னர் பரம்பரையின்
வழி வந்தவரும்,
ஒன்றிய முன்னாள் அமைச்சரும்,
இந்தியத் தத்துவ ஞானியுமான
டாக்டர் கரண் சிங்
ஞானபீட விருதினை
எனக்கு வழங்குகிறார்.
பெற்றுக்கொண்டு
ஏற்புரை ஆற்றுகிறேன்.

அதற்கான அழைப்பிதழை
திராவிட முன்னேற்றக்
கழகத் தலைவரும்,
முன்னாள் முதலமைச்சருமான
தளபதி மு.க.ஸ்டாலின்
அவர்களுக்கு வழங்கினேன்.

மகிழ்ந்தார்;
வாழ்த்தி மகிழ்வித்தார்.

# த.வெ.க. மின்வெட்டுத்துறை அமைச்சருக்குக் கிடைத்த பல்பு!


## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

சென்னை, ஜூன் 28-

த.வெ.க. ஆட்சியில் நடக்கும் தொடர் மின்வெட்டை மறைக்கவும், தங்களின் நிர்வாகத் திறமையின்மையைத் தி.மு.க. மீது பழிபோடவும் த.வெ.க.வின் மின்வெட்டுத் துறை அமைச்சர் அவசர அவசரமாக மின்சார வாரியம் குறித்து ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டார்.

ஆனால், த.வெ.க. வெளியிட்ட அந்த அறிக்கையே இப்போது அவர்களுக்கு Self Goal ஆக மாறி, முகத்தில் கரியைப் பூசியுள்ளது!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான 2021-2026 தி.மு.க. ஆட்சியின் மிகச்சிறப்பான நிர்வாக ஆளுமைக்கு இந்தத் தரவுகளே சாட்சி,




2016-21 அ.தி.மு.க. ஆட்சியில் வெறும் ரூ.3,20,140 ஆக இருந்த மின்வாரிய வருவாயை, 2021-26 தி.மு.க. ஆட்சி ரூ.4,97,996 ஆகப் பல மடங்கு உயர்த்திப் பிரம்மாண்டமான சாதனையைப் படைத்துள்ளது!

அ.தி.மு.க. ஆட்சியில் அதலபாதாளத்தில் சரிந்து ரூ.58,534 ஆக இருந்த பற்றாக்குறையை, திராவிட மாடல் ஆட்சி தனது நிதி மேலாண்மையால் ரூ.34,447 ஆகக் குறைத்து மின்சாரத்துறையை வலுப்படுத்தியுள்ளது!

தி.மு.க.வின் மீது அபாண்டமாகப் பழி போடலாம் என்று நினைத்து, திராவிட மாடல் அரசின் சிறப்பான நிர்வாகத் திறனையும், நிதி ஒழுக்கத்தையும் தங்கள் சொந்த அறிக்கை மூலமாகவே ஊருக்குப் பறைசாற்றிய த.வெ.க. அமைச்சரின் அறிவுக்கூர்மையை நினைத்தால் சிரிப்புதான் வருகிறது!

## பள்ளி மாணவர்களுக்கு சாதி அடையாளத்துடன் அடையாள அட்டையா?

# மக்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

சென்னை, ஜூன் 28-

பள்ளி மாணவர்களுக்குச் சாதி அடையாளத்துடன் அடையாள அட்டை வழங்கப்படும் என்று அமைச்சர் ஒருவரால் அறிவிக்கப்பட்டதற்கு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தமது சமூக வலைதளப் பக்கத்தில், இதன் காரணமாக மக்கள் மனதில்



எழுந்துள்ள சந்தேகங்களுக்கு விரிவான விளக்கம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அது வருமாறு :-

"பள்ளி மாணவர்களுக்கு சாதி விவரத்துடன் அடையாள அட்டை வழங்க முடிவு செய்துள்ளோம்" என்று அமைச்சர் செங்கோட்டையன் பரபரப்பு பேட்டி அளித்துள்ளார்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சாதி அடையாளத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவது குறித்து வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன் பேசியிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

அமைச்சரின் இந்தப் பேச்சின் உண்மையான நோக்கம் என்ன? இது அரசின் நிலைப்பாடா? மாணவர்களிடையே சாதி அடையாளத்தை ஊக்குவிக்கும் வகையிலான இந்தக் கருத்துக் குறித்து, தமிழ்நாட்டு மக்களின் மனதில் எழுந்துள்ள சந்தேகங்களுக்கு அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இன்று

# அம்மன்குடி டி.இராஜேந்திரன் இல்லத் திருமணவிழா!

### முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு வாழ்த்துரை! முன்னாள் அமைச்சர்கள் – கழக முன்னணியினர் பங்கேற்பு!

தஞ்சை, ஜூன் 28-

தஞ்சை மாவட்ட தி.மு.க. இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் அம்மன்குடி டி.ராஜேந்திரன் - வைஜெயந்தி ஆகியோரின் புதல்வர் டி.ஆர்.முத்து, புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், இலந்தாவடி டி.மாதவன் - திலகவதி ஆகியோரின் புதல்வி எம்.பிரியதர்ஷினி ஆகியோரின் திருமண விழா முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடனும் முன்னாள் தமிழக முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடனும் தமிழ்நாடு சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின்



தலைமையில் இன்று (28.6.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10.30 மணி அளவில் சுக்கிரன் விடுதியில் உள்ள பன்னீர் தேவர் திருமண மஹாலில் நடைபெறுகிறது.

இத்திருமண விழாவில் தஞ்சை மத்திய மாவட்டக் கழக செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகிறார்.

கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணவிழாவை தலைமை ஏற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் இவ்விழாவில் கழக முதன்மைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி. ராஜா, கோவி. செழியன், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ., எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., எஸ்.முரசொலி எம்.பி.,

எம்.ராமச்சந்திரன், கா.அண்ணாதுரை எம்எல்.ஏ., சாக்கோட்டை க.அன்பழகன், டி.பழனிவேல், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, அன்பகம் செந்தில், ஏனாதி பாலசுப்ரமணியம், என். அசோக்குமார் எம்.எல்.ஏ., டி.கே.ஜி. நீலமேகம், ஆர்.ரங்கசாமி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன், நா.இளையராஜா, கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, சன்.ராமநாதன், த.சந்திரசேகர், கேப்டன் ஆர்.தமிழ்ச்செல்வன் எம்.எல்.ஏ., சுப.தமிழழகன், கார்த்திக் தொண்டைமான், விஜய.ரவி, சி.ராஜேந்திரன், கோ.சக்திவேல், சு.ராஜாத் தம்பி, என்.எஸ்.துரைராஜ், பி.கரிகாலன், கே.புண்ணியமூர்த்தி, ஆலங்குடி சாமி, து.செல்வம், வி.ஆர்.எஸ்.ராமசாமி, ஆர்.எஸ். சம்பத், சி.முருகப்பன், எம்.வி. அண்ணாதுரை, வி. செல்வம், டாக்டர் அஞ்சுகம் பூபதி, ஆர்.சின்னதுரை மற்றும் தலைமைக் கழக நிர்வாகி கள், செயற்குழு உறுப்பினர்கள், தஞ்சை மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், திருவோணம் வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

நிறைவாக தஞ்சை மாவட்டக் கழக இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் டி.ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாரியம்மன் மற்றும் விநாயகர் கோவில்களின் கருவறையில் முதல்வர் ஜோசப் விஜய் படத்தையும் வைத்து த.வெ.க.வினர் சிறப்பு பூஜை நடத்தியிருக்கிறார்களே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; நடிகராக இருந்து நாடாள வந்தவரை,கோவில் கருவறையில் வைத்துக் கும்பிட்டு வழிபாடு செய்யும் பகுத்தறிவுக்குக் கொவ்வாத கோமாளித் தனத்தை, சேலம் பெரியார் ஜி.பி. சோம சுந்தரம் அவர்கள் பார்க்க நேரிட்டிருந்தால், இரத்தக் கண்ணீரே சிந்தியிருப்பார் !**

**சேலம் பெரியார் சோமசுந்தரம் அவர்களைப் பற்றி, "கழகம் என்றால் துடிதுடிப்பான வாலிபர்கள் மட்டும் கொண்டது இல்லை; அனுபவமும் வயதும் மிக்க சோமசுந்தரம் போன்றவர்களையும் கொண்டது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது நினைவுகூரத்தக்கது !**



புவி வெப்பமடைதல் காலநிலை மாற்றம் போன்ற முக்கிய சூழலியல் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு, திருச்செந்தூர் குலசேகரன்பட்டினம் கடலோரப் பகுதியில் சதுப்புநில மரங்களுடன் பனை, வேம்பு உள்ளிட்ட மரபார்ந்த மரங்களை நட்டு உருவாக்கப்பட்டுவரும் பசுமைக் கேடயம் பணிகளை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆய்வு செய்தார். நிகழ்வில் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

## காவிரி உரிமையைக் காக்க வேண்டிய நேரத்தில்

# தமிழ்நாட்டின் குரலை பலவீனப்படுத்தும் நியமனம் ஏன்?

### மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜூன் 28-

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாக கர்நாடகத்தைச் சேர்ந்த முதலமைச்சர் விஜய் நடித்த 'ஜனநாயகன்' திரைப்படத்தின் தயாரிப்பாளர் ஒருவரை நியமித்திருப்பது பல்வேறு கேள்விகளையும் கவலைகளையும் எழுப்பியுள்ளது.

காவிரி நீர் உரிமை பிரச்சினை தொடர்ந்து தமிழ்நாட்டின் வாழ்வாதாரப் போராட்டமாக நீடித்து வரும் சூழலில், இந்த நியமனம் விஜய் அரசின் அரசியல் புரிதலையும் முன்னுரிமைகளையும் சந்தேகிக்க வைக்கிறது.

காவிரி என்பது வெறும் நீர்ப் பிரச்சினை அல்ல; அது தமிழக விவசாயிகளின் உயிர்வாழ்வு உரிமை. டெல்டா மாவட்ட மக்களின் பொருளாதாரம், விவசாயம், குடிநீர் தேவைகள் அனைத்தும் காவிரி நீருடன் நேரடியாக தொடர்புடையவை. இத்தகைய உணர்வுப்பூர்வமான பிரச்சினையில் தமிழ்நாட்டின்



உரிமைகளை வலிமையாக முன்வைத்து போராட வேண்டிய பொறுப்பு டெல்லி சிறப்பு பிரதிநிதிக்குப் பெரிதும் உள்ளது.

இந்த நிலையில், கர்நாடக அரசியலுடனும் சமூக உணர்வுகளுடனும் தொடர்புடைய ஒருவரை நியமிப்பது தேவையற்ற சந்தேகங்களையும் அரசியல் சர்ச்சைகளையும் உருவாக்குகிறது. இது தமிழ்நாட்டு மக்களின் மனநிலையையும் காவிரி விவகாரத்தில் அவர்களின் நீண்டகால வேதனையையும் புறக்கணிக்கும் செயலாகவே பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் உரிமைகள், மொழி, நீர்வளங்கள் மற்றும் கூட்டாட்சி உரிமைகள் குறித்து தெளிவான புரிதலும் உறுதியான நிலைப்பாடும் கொண்ட பல திறமையான தமிழர்கள் இருக்கும்போது, இந்த நியமனம் எந்த அடிப்படையில் செய்யப்பட்டது என்பதை அரசு வெளிப்படையாக விளக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள், தமிழக மக்களின் உணர்வுகளுடன் முழுமையாக ஒன்றிப்போனவர்களாக இருக்க வேண்டும். இல்லையெனில், அது மக்களிடையே நம்பிக்கையின்மையையும் அதிருப்தியையும் அதிகரிக்கும்.

எனவே, தமிழ்நாடு அரசு இந்த நியமனத்தை மறுபரிசீலனை செய்து, காவிரி உள்ளிட்ட மாநில உரிமைப்பிரச்சினைகளில் தமிழகத்தின் குரலை தைரியமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கும் நபரை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்று பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.